[2013 ஏப்ரல் 9

193—

கோயில் குளம் தூர் வாருதல்

***21328—திரு. ஏ.கே. போஸ்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை வடக்கு தொகுதி, தல்லாகுளம் அருள்மிகு பிரசன்ன வெங்கடாஜலபதி திருக்கோயில் குளத்தினைத் தூர் வார அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மதுரை நகர், தல்லாகுளம், அருள்மிகு பிரசன்ன வெங்கடாஜலபதி திருக்கோயில், மதுரை, அழகர்கோயில், அருள்மிகு கள்ளழகர் திருக்கோயிலின் உபகோயில் ஆகும். இத்திருக்கோயில் நிருவாகம் துணை ஆணையர் மற்றும் செயல் அலுவலரால் கவனிக்கப்பட்டு வருகிறது.

தல்லாகுளம், அருள்மிகு பிரசன்ன வெங்கடாஜலபதி திருக்கோயிலில் ஒவ்வொரு வருடமும் புரட்டாசி மாதத்தில் நடைபெறும் பிரம்மோற்சவ விழாவின்போது திருக்கோயில் தெப்பக்குளம் தூர் வாரப்பட்டு, தெப்பத் திருவிழா நடைபெற்று வருகிறது.

மாண்புமிகு அம்மா அவர்களின் மேலான ஆணையின்படி, நடப்பாண்டில் ரூபாய் 1 இலட்சம் செலவில் திருப்பாலை கால்வாய் முதல் தெப்பம் வரை சுமார் ஒரு கிலோ மீட்டர் தொலைவிற்கு வாய்க்காலை சுத்தம் செய்து தூர் வாருதல், தெப்பக்குளத்தைச் சுற்றி புல்டோசர்மூலம் சமப்படுத்துதல் மற்றும் தெப்பக்குளத்தைத் தூர் வாருதல் ஆகிய பணிகள் திருக்கோயில் நிதி மற்றும் உபயதாரர்கள்மூலம் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டில் ஏற்பட்ட வறட்சியின் காரணமாக போதிய அளவிற்குத் தண்ணீர் வரத்து இல்லாததனால் நிலை தெப்பமாக தெப்பத் திருவிழா நடைபெற்றது. இதுபோன்ற நிலையினை மாற்றி அமைத்திட மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் இதய

2013 ஏப்ரல் 9]

தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த 2003 ஆம் ஆண்டில் தமிழக முதலமைச்சராக நல்லாட்சி புரிந்தபோது உலக நாடுகளே வியந்து போற்றுகின்ற வண்ணம் உன்னதத் திட்டமான மழைநீர் சேகரிப்புத் திட்டத்தினை தமிழ்நாடு எங்கும் செயல்படுத்தினார்கள் இந்த சிறப்பான திட்டத்தை திருக்கோயில் திருக்குளங்களுக்கும் விரிவுபடுத்தினார்கள்.

ஆனால், கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் மழைநீர் சேகரிப்புத் திட்டம் சரிவர செயல்படுத்தாத காரணத்தினால், திருக்கோயிலில் உள்ள திருக்குளங்கள் வறண்டு போய் தெப்பத் திருவிழாவினை நடத்த இயலாத நிலை இருந்தது. அந்த நிலைகளை எல்லாம் மாற்றும் வகையிலே, காவேரியை மீட்டெடுத்த இலட்சியத் தாய் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்றதும் இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை ஆளுகையின்கீழ் உள்ள 1,586 திருக்கோயில்களுக்குச் சொந்தமான 2,359 திருக்குளங்களைச் சீரமைத்து தெப்பத் திருவிழா நடைபெறவேண்டுமென்று ஆணையிட்டார்கள்.

அதன்படி, மாண்புமிகு அம்மா அவர்களின் மேலான ஆணையின்படி, இதுவரை 1,819 திருக்குளங்கள் தூர் வாரப்பட்டு, சீரமைக்கப்பட்டு நல்ல நிலையில் உள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) மீதமுள்ள 540 திருக்குளங்களில் சீரமைப்புப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. அந்த வகையிலே, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையைச் செயல்படுத்தும் விதமாக மதுரை, தல்லாகுளம், அருள்மிகு பிரசன்ன வெங்கடாஜலபதி திருக்கோயில் தெப்பக்குளத்தினை ஆழப்படுத்தி, எப்போதும் தண்ணீர் இருக்கும் வண்ணம் ஆழ்குழாய்க் கிணறு அமைக்கவும், தெப்பக்குளம் கரை முழுவதும் மரங்கள், பூச்செடிகள், மின் விளக்குகள், பக்தர்களின் வசதிக்காக இருக்கைகள் மற்றும் பூங்கா அமைத்திட மாவட்ட நிருவாகம் மற்றும் திருக்கோயில் நிதியின்மூலம் ரூபாய் 61 இலட்சத்திற்கு திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, விரைவில் தெப்பக்குளத்தின் திருப்பணிகள் தொடங்கப்பட்டு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் இந்த ஆண்டு புரட்டாசி மாதம் நடைபெறும் பிரம்மோற்சவத்தின்போது தெப்பத் திருவிழா மிகச் சிறப்பாக நடைபெறும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்

வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே. போஸ் அவர்கள்.

முற்பகல் 11-20

திரு. ஏ.கே. போஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அனுதினமும் வணங்கும் எங்கள் குல தெய்வம், தமிழக மக்களின் விடிவெள்ளி, புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். சட்டமன்றத்தில் அனுதினமும் 110 விதியின்கீழ் நல்ல பல திட்டங்களை தமிழக மக்களுக்கு வாரி வழங்கும் வள்ளல் அம்மா நீங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய தொகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையான கோரிப்பாளையம் தேவர் சிலை அருகில் மேம்பாலம் அமைப்பதற்கு ஆணையிட்ட எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) உங்களுக்கு என் தொகுதி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் கோடானுகோடி நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில், தல்லாகுளம், அருள்மிகு ஸ்ரீ பிரசன்ன வெங்கடாஜலபதி திருக்கோயில் உள்ளது. அந்தத் திருக்கோயிலில், சன்னதிக்கு அருகில் கோயிலுக்குச் சொந்தமான குளம் உள்ளது. அந்தக் குளத்தில் தண்ணீர் இல்லாமல் வறண்டு போய் இருக்கிறது. திருவிழாக் காலங்களில் சாமி தெப்பத்தில் சுற்றி வருவதற்குத் தண்ணீர் இல்லாத காரணத்தால், சாமியை வண்டியில் வைத்து கரையோரம் சுற்றி வருகிறார்கள். ஆகவே, இந்தத் தெப்பக் குளத்தை தூர் வாரி, தண்ணீர் நிரப்பி, அருள்மிகு பிரசன்ன வெங்கடாஜலபதி சாமியினுடைய தெப்ப உற்சவம் நடைபெறுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள்—கருணையுள்ளத்தோடு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்—நல்ல தெய்வ சேஷத்திரமாக இருந்த மதுரையை, கடந்த ஆட்சியாளர்கள் கொலைகார நகரமாக மாற்றி அமைத்தார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தன்னுடைய செல்வாக்கினால், அதை மீண்டும் கோயில் நகரமாக மாற்றி காண்பித்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தத் தெப்பக் குளத்தையும், நீர்த்தேக்கி சிறப்புறச் செய்ய வேண்டுமென்று அம்மா அவர்களை வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

2013 ஏப்ரல் 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய மேலான ஆணையின்படி இந்தக் குளத்தை தூர் வாரி மற்றும் அனைத்து ஏற்பாடுகளும் செய்து, ஆழப்படுத்தி தண்ணீரை நிரப்பும் வண்ணம் ஆழ்குழாய்க்கிணறு அமைத்து, அனைத்து மின் விளக்குகள் எல்லாம் செப்பனிடப்படும். மாண்புமிகு அம்மா அவர்கள் இதற்காக 61 இலட்சம் ரூபாய் நிதியினை ஒதுக்கியிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, விரைவிலே, இந்தப் பணிகளெல்லாம் முடிக்கப்பட்டு, இந்த ஆண்டு புரட்டாசி மாதம் பிரம்மோற்சவத்தின்போது தெப்பத் திருவிழா மிகச் சிறப்பாக புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே நடைபெறும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மகிழ்ச்சியோடு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே. போஸ் அவர்கள்.

திரு. ஏ.கே. போஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் சொன்ன பிரகாரம், அங்கே தண்ணீர் தேக்கி திருவிழாவைச் சிறப்பாகச் செய்வதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டதற்கும் கோடானுகோடி நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 194, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

194—

நீர்த்தேக்கத் தொட்டி

***20494—திரு. கே. உலகநாதன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனையில் 25,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?